

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களை இந்திய ஆட்சிப் பணி அலுவலர்களாக பதவி உயர்வு பெற்ற மருத்துவர் மு.வீரப்பன், சி.முத்துகுமரன், பி.எஸ்.லீலா அலெக்ஸ், ச.கவிதா, இரா.ரேவதி ஆகியோர் நேற்று முன்தினம் (31.10.2025) நேரில் சந்தித்து வாழ்த்துப் பெற்றனர்.

### எண்ணூர் பெரியகுப்பம் கடல் பகுதியில் கடலில் மூழ்கி உயிரிழந்த

# 4 பெண்களின் குடும்பத்தாருக்கு தலா ரூ.3 லட்சம் நிதி உதவி!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

சென்னை, நவ.2-

சென்னை மாவட்டம், எண்ணூர் பெரியகுப்பம் கடற்கரை பகுதியில் கடலில் மூழ்கி உயிரிழந்த நான்கு பெண்களின் குடும்பத்தினருக்கு ஆறுதல் மற்றும் நிதியுதவி அறிவித்து முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் அறிவிப்பு வருமாறு:-

திருவள்ளூர் மாவட்டம், கும்மிடிப்பூண்டி வட்டம், பெத்திகுப்பம் கிராமத்தில் உள்ள இலங்கை தமிழர் மறுவாழ்வு முகாமில் வசித்து வந்த திருமதி.தேவகி வயது 29) க/பெ.சந்தோஷ், கும்மிடிப்பூண்டி வட்டம், நம்பாளையத்தைச் சேர்ந்த செல்வி. பவானி (வயது 19) த/பெ.செல்வகுமார், காட்டுமேடு தெரு, சின்ன கோபாலபுரம் பெரிய கோபாலபுரத்தைச் சேர்ந்த செல்வி.ஷாலினி (வயது 18) த/பெ. ஜெயம்புலிங்கம் மற்றும் பஜனை கோயில் தெரு, திருவல்லி காலனியைச் சேர்ந்த செல்வி.காயத்ரி (வயது 18) த/பெ.மாதவன் ஆகிய நான்கு பெண்களும் நேற்று முன்தினம் (31.10.2025) பிற்பகல் சுமார் 2.30 மணியளவில் சென்னைக்கு அருகிலுள்ள எண்ணூர், பெரியகுப்பம் கடற்கரை பகுதியில் குளித்துக் கொண்டிருந்தபோது எதிர்பாராதவிதமாக மேற்படி நால்வரும் கடலில் மூழ்கி உயிரிழந்தனர் என்ற துயரகரமான செய்தியைக் கேட்டு மிகவும் அதிர்ச்சியும் வேதனையும் அடைந்தேன்.

மேலும், இச்சம்பவத்தில் உயிரிழந்த நான்கு பெண்களின் குடும்பத்தினருக்கும் அவர்களது உறவினர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும், ஆறுதலையும் தெரிவித்துக் கொள்வதோடு, உயிரிழந்த நால்வரின் குடும்பத்தினருக்கும் தலா மூன்று இலட்சம் ரூபாய் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கிடவும் உத்தரவிட்டுள்ளேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தெரிவித்துள்ளார்.

### திராவிடர் கழகம் சார்பில்

# சட்டப்பேரவை முன்னாள் தலைவர் முனு ஆதி நூற்றாண்டு விழா!

## திருவுருவப்படத்திற்கு திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி மலரஞ்சலி!

தாம்பரம், நவ.2–

திராவிடர் கழகம் சார்பில் " தமிழ்நாடு சட்டப்பேரவை முன்னாள் தலைவர் முனு ஆதி அவர்களின் நூற்றாண்டு விழாவும், சாதி ஆணவக் கொலையை தடுக்க ஆணையம் அமைத்த தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு பாராட்டு விழாவும் தாம்பரத்தில் 27.10.25 அன்று சிறப்பாக கொண்டாடப்பட்டது.

திராவிடர் கழகத் தலைவர் ஆசிரியர் கி.வீரமணி அவர்கள் இந்நிகழ்ச்சிக்கு தலைமை ஏற்று நிறைவுரை ஆற்றினார்.

“பேரறிஞர் அண்ணா அவர்கள் முதல்வராய் இருக்கும்போது தியாகிகளுக்கு மானியம் கொடுப்பது சம்பந்தமான விவாதத்தின் போது இந்த விழாவின் நாயகன் முனு ஆதி அவர்கள் சட்டமன்ற உறுப்பினராக இருக்கும் பொழுது அண்ணாவைப் பார்த்து நம்மை ஆளாக்கிய தந்தை பெரியாருக்கு என்ன செய்யப் போகிறோம் ? என்று கேட்க , ”

இந்த தி.மு.க. ஆட்சியே தந்தை பெரியாருக்கு காணிக்கை” என்றார் அண்ணா. இந்த வரலாற்று சிறப்புமிக்க பிரகடனத்தை பேரறிஞர் அண்ணா அவர்கள் சொல்வதற்கு காரணமாய் அமைந்தவர் தான் முனு ஆத” என்று பாராட்டினார்.

அதேபோல ,கடந்த மாதம் நடைபெற்ற சுயமரியாதை நூற்றாண்டு நிறைவு மாநாட்டில் சாதி ஆணவ படுகொலைகளை தடுத்திட சட்டம் இயற்றிட வேண்டும் என்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டு அதை தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களிடம் கொடுத்தோம்.

மிகக் குறுகிய காலத்தில் அந்த சட்டம் இயற்றுவதற்கு ஏதுவாக ஓய்வு பெற்ற நீதிபதி கே.எம். பாஷா தலைமையில் ஒரு நபர் ஆணையம் அமைத்திட்ட தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களை எவ்வளவு பாராட்டினாலும் தகும் என்று வீரமணி கூறினார்.

இந்நிகழ்ச்சியில் தாம்பரம் மாவட்ட திராவிட கழக தலைவர் ப.முத்தையன் அனைவரையும் வரவேற்றார்.

தி.மு.க. அமைப்பு செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, இந்திய கம்யூனிஸ்ட் கட்சி மூத்த தலைவர் சி.மகேந்திரன் , மனிதநேய மக்கள் கட்சியின் மாநில துணை பொது செயலாளர் எம்.யாகூப், தி.மு.க. தலைமை தீர்மானக் குழு உறுப்பினர் மி.ஆ. வைத்தியலிங்கம், தாம்பரம் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.ஆர். ராஜா, தாம்பரம் மேயர் வசந்தகுமாரி கமலக்கண்ணன் உள்ளிட்ட அனைத்து கட்சி தலைவர்களும் சிறப்புரை ஆற்றினர்.

இறுதியாக முனு ஆதி அவர்களின் மகனும் தி.மு.க. தலைமை செயற்குழு உறுப்பினருமான ஆதி மாறன் நன்றியுரை ஆற்றினர்.

இந்நிகழ்ச்சியில் அனைத்து கட்சி பிரமுகர் கள் பொதுமக்கள் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

# நீலகிரி மாவட்ட தி.மு.க. செயற்குழுக் கூட்டம்!

## மாவட்டப் பொறுப்பாளர் கே.எம்.ராஜீ வேண்டுகோள்!

நீலகிரி, நவ. 2-

நீலகிரி மாவட்டக் கழகப் பொறுப்பாளர் கே.எம். ராஜீ விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-



நீலகிரி மாவட்ட தி.மு.க. செயற்குழுக் கூட்டம் இன்று (2.11.2025 - ஞாயிற்றுக்கிழமை) காலை 11 மணி அளவில் மாவட்டக் கழக அவை தலைவர் கே. போஜன் தலைமையில், கழக உயர்நிலை செயல்திட்டக்குழு உறுப்பினர் பா. மு.முபாரக், கழக தேர்தல் பணி செயலாளர், அரசு தலைமைக் கொறடா கா.ராமச்சந்திரன் மற்றும் சட்டமன்றத் தொகுதி பார்வையாளர்கள் ஆர்.பி.பரமேஷ்குமார் (கூடலூர்), தென்றல் செல்வராஜ் (உதகை), கோவை திராவிட மணி (குன்னூர்) ஆகியோர் முன்னிலையில் மாவட்டக் கழக அலுவலகமான உதகை கலைஞர் அறிவாலயத்தில் நடைபெறவுள்ளது.

இதில் மாவட்டக் கழக நிர்வாகிகள், மாவட்டத்திலுள்ள தலைமைக் கழக நிர்வாகிகள், தலைமைக் கழக செயற்குழு-பொதுக்குழு உறுப்பினர்கள்,

நகர ஒன்றிய பேரூர் கழகச் செயலாளர்கள், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் தலைவர்கள் உள்ளிட்ட அனைவரும் தவறாது கலந்து சிறப்பிக்க கேட்டுக் கொள்கிறேன்.

பொருள்:

1. கழக ஆக்கப் பணிகள்.

2. 28.10.2025 சென்னையில் நடந்து முடிந்த என் வாக்குச்சாவடி - வெற்றி வாக்குச்சாவடி பயிற்சியில் கழக தலைவர் அவர்கள் வழங்கிய ஆலோசனைகள் குறித்து.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.



மயிலாடுதுறை மாவட்டம் தி.மு.க. பூம்புகார் சட்டமன்றத் தொகுதி என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச்சாவடி பாக நிலை முகவர்கள் (பி.எல்.ஏ.2) மற்றும் பாக டிஜிட்டல் முகவர்கள் (பி.டி.ஏ.) ஆலோசனை மற்றும் பயிற்சிக் கூட்டம் நல்லாடை சரவண பாலாஜி திருமண மண்டபத்தில் நடைபெற்றது. கூட்டத்தில் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் பேசினார். உடன் மாவட்டக் கழகச் செயலாளரும், பூம்புகார் சட்டமன்ற உறுப்பினருமான நிவேதா எம்.முருகன், கழக உயர்நிலை செயல்திட்டக் குழு உறுப்பினர் குத்தாலம் பி.கல்யாணம், மன்னை த.சோழராஜன், கேசவன், பி.எம்.ஸ்ரீதர் ஆகியோர் உள்ளனர்.

### பா.ஜ.க.வின் பிரித்தாளும் சூழ்ச்சிகளை

# தமிழ்நாடு மட்டுமல்ல; இந்தியா ஏற்காது!

## முதல்வர் மு.க.ஸ்டாலினை புகழ்ந்து வரும் வட மாநிலத்தவர்!



பீகார் தேர்தல் பிரச்சாரத்தில் பிரதமர் மோடி அவர்கள் தமிழர்களை இழிவுபடுத்தி பேசி வருகிறார் !

இப்போது மட்டுமல்ல தமிழ்நாட்டையும் தமிழர்களையும் இழிவுபடுத்துவது பா.ஜ.க.வின் அற்பத்தனமான நடைமுறை என்பதை அனைவரும் அறிவார்கள் !

பீகார் மாநிலத்தில் தேர்தல் பிரச்சாரம் செய்யவந்த பிரதமர் மோடி அவர்கள் பீகார் மக்களுக்கு ஒன்றிய அரசு செய்த சாதனைகளை திட்டங்களை எடுத்துச் சொல்லாமல் பீகாரைச் சேர்ந்த தொழிலாளர்களுக்கு தமிழ்நாட்டில் தி.மு.க.வினர் துன்பம் இழைப்பதாக ஒரு பொய்யான செய்தியை கூறி தமிழர்கள் மீது வன்மத்தை வெளிப்படுத்தி உள்ளார். இந்தச் செய்தியை அறிந்தவுடன் தமிழ் மக்கள் வேதனை அடைந்து வருகிறார்கள்.

**இதுதொடர்பாக முதலமைச்சர்மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று வெளியிட்டுள்ள வலைதளப் பதிவில்,**

**“இந்த நாட்டிலுள்ள அனைவருக்குமான மாண்புமிகு பிரதமர் பொறுப்பில் இருக்கிறோம் என்பதையே நரேந்திர மோடி அவர்கள் அடிக்கடி மறந்து, இதுபோன்ற பேச்சுகளால் தன்னுடைய பொறுப்புக்குரிய மாண்பை இழந்துவிடக் கூடாது என்று ஒரு தமிழனாக வேதனையுடன் கேட்டுக் கொள்கிறேன்.**

**ஒடிசா பீகார் என்று எங்கு சென்றாலும், பா.ஜ.க.வினர் தமிழர்களின் மீதான வன்மத்தைத் தேர்தல் அரசியலுக்காக வெளிப்படுத்துவதற்குத் தமிழ்நாட்டு மக்களின் முதலமைச்சர் என்ற முறையில் கடுமையான கண்டனத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.**

**பன்முகத்தன்மை கொண்ட, வேற்றுமையில் ஒற்றுமையைக் காணும் பெருமைமிக்க இந்தியாவில், இந்துக்களுக்கும் முஸ்லீம்களுக்கும் பகையை வளர்ப்பது, தமிழர்களுக்கும் பீகார் மக்களுக்கும் பகை உண்டாக்கும்படி நடந்துகொள்வது போன்ற அற்ப அரசியல் செயல்பாடுகளை நிறுத்திவிட்டு, நாட்டின் நலன் மீது பிரதமரும் பா.ஜ.க.,வினரும் கவனம் செலுத்த வேண்டும் என வலியுறுத்துகிறேன்”.**

**என குறிப்பிட்டுள்ளார்கள்.**

**தமிழர்கள் ஏற்கனவே பா.ஜ.க.வால் இழிவு படுத்தப்பட்ட முன் நிகழ்வுகள்**

தமிழர்கள் மீதும் தமிழ்நாட்டின் மீதும் இப்படிக் குறை கூறி மக்களைத் திசை திருப்பும் போக்கு இப்போது மட்டுமல்ல பா.ஜ.க.வினரால் முன்பே பல முறை கூறப்பட்டுள்ளது.

ஒடிசா மாநிலத்தில் முதலமைச்சராக இருந்த நவீன் பட்நாயக் அவர்களின் நம்பிக்கையைப் பெற்று அவருடைய தனிச் செயலாளராக பணியாற்றியவர் தமிழ்நாட்டைச் சேர்ந்த பி.கே. பாண்டியன் என்பதால், ஒடிசா மாநிலத்தில் நடைபெற்ற தேர்தலின் போது பூரி ஜெகந்நாதர் கோயில் ஆலயக் கருவூலத்தின் சாவி தமிழ்நாட்டில் இருக்கிறது என்று கூறியதுடன், ஒடிசாவை தமிழர்கள் ஆள்வதா என தமிழர்களை திருடர்கள் போல் கேவலப்படுத்தி ஒரு பொய்யான வதந்தியை கிளப்பிவிட்டவர்தான் பிரதமர் மோடி அவர்கள்.

தமிழ்நாடு முழுவதிலும் பல இலட்சக் கணக்கான வடமாநிலத் தொழிலாளர்கள் வந்து தங்கி கூலி வேலைகள் செய்து மாதந்தோறும் பல கோடி ரூபாயை வடமாநிலங்களில் உள்ள தத்தம் குடும்பங்களுக்கு அனுப்பிக்கொண்டு அமைதியாக வாழ்ந்து வருவதை இன்றும் காணலாம்.

2023ஆம் ஆண்டில் ஹோலிப் பண்டிகையை கொண்டாடுவதற்காக வடமாநிலத் தொழிலாளர்கள் இரயில் மூலம் அவர்களது சொந்த மாநிலத்திற்கு பயணம் செய்யப் புறப்பட்ட காட்சிகள் தொலைக்காட்சிகளில் ஒளிபரப்பானது. இதை மையப்படுத்தி தமிழ்நாட்டில் வடமாநிலத் தொழிலாளர்கள் தாக்கப்பட்டார்கள், அதனால் தங்கள் மாநிலங்களுக்கு திரும்புகிறார்கள் என்று அபாண்டமான ஒரு பொய்ச் செய்தியை பரப்பினார்கள். செய்தி வெளிவந்தவுடன் முதலமைச்சர் அவர்களே நேரிடையாக தலையிட்டு வடமாநிலத் தொழிலாளர்கள் தமிழ்நாட்டில் தாக்கப்படவில்லை. அவர்கள் எல்லாம் அமைதியாக வாழ்கிறார்கள் என்பதை தொழிலாளர்களைச் சந்தித்து அவர்கள் கூறிய தகவலின் அடிப்படையில் பொய்ச் செய்தியை மறுத்தார்கள்.

தமிழ்நாட்டில் வடமாநிலத்தவர்கள், குறிப்பாக பீகார் மாநிலத் தொழிலாளர்கள் தாக்கப்படுவதாகவும் அவர்கள் பாதுகாப்பற்ற சூழலில் இங்கு வாழ்வதாகவும் அடிப்படையற்ற வதந்திகளை பரப்பிய வட மாநிலத்தைச் சேர்ந்த மனிஷ் காஷ்யப் எனும் யூடியூபர் கைது செய்யப்பட்டார்.

கொரோனா காலத்தில் புலம்பெயர்ந்து வந்து தமிழ்நாட்டில் வேலை செய்யும் தொழிலாளர்களின் பாதுகாப்பிற்காக பல்வேறு உதவிகளும் சலுகைகளும் அளிக்கப்பட்டன. அவர்கள் சொந்த மாநிலங்களுக்குச் செல்ல விரும்பியவர்களுக்கு ஆங்காங்கே இரயில் நிலையங்களில் உதவி முகாம்கள் அமைக்கப்பட்டு அவர்களுக்கு உதவிகள் செய்யப்பட்டன.

கொல்கத்தாவில் நிகழ்ந்த மேம்பால விபத்தில் 26 பேர் உயிரிழந்தபோது, அதனைக் கடவுளின் செயல், மமதா ஆட்சியில் இருக்கக் கூடாது என கடவுள் அனுப்பிய செய்தி என்று மக்களின் இறப்பையும் பிரதமர் மோடி கொச்சைப்படுத்திப் பேசினார்.

இந்தியா முழுக்கப் பணிக்காகப் புலம்பெயர்ந்து வாழும் மேற்கு வங்க முஸ்லீம்களை “பங்ளாதேசி” என பா.ஜ.க. வெறுப்பை விதைக்கிறது.

வன்முறையாளர்களை அவர்கள் அணிந்துள்ள ஆடையை வைத்தே அடையாளம் காணலாம் எனவும் இஸ்லாமிய மக்களைக் குறிவைத்துப் பிரதமர் மோடி இழிவாகப் பேசியுள்ளார்.

இது ஒரு நாட்டின் பிரதமர் பொறுப்பில் இருப்பவர் பின்பற்றும் நடைமுறையாக இருப்பது மிகவும் வருந்தத்தக்கது.

வந்தாரை வாழ வைக்கும் தமிழ்நாடு இது. இதனை நம்மை விட வடமாநிலங்களில் இருந்து தமிழ்நாட்டுக்கு வந்து வாழும் மக்களே அழுத்தமாகச் சொல்வார்கள். தனியார் தொலைக்காட்சி நடத்திய விவாத மேடையில் பேசிய வடமாநிலத்துப் பெண் ஒருவர் பேசிய பேச்சு ஒன்று. சமூக ஊடகங்களில் ஒரு முறை அதிகம் பரவியது. அது,

“முடியாத தனது குழந்தையைத் தூக்கிக் கொண்டு தமிழ்நாட்டுக்கு வாழ வந்த நான். ரேஷன் கார்டு பெற்று, அதன் மூலமாக முதலமைச்சர் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் பல இலட்சம் ரூபாய் மதிப்பிலான சிகிச்சையை இலவசமாகச் செய்ய முடிந்தது. இப்போது என் குழந்தை பேசுகிறது. இதற்கு தமிழ்நாடு தான் காரணம்” என்று அளித்த பேட்டியானது யாராலும் மறக்க முடியாதது. தாய்த் தமிழ்நாடு என்பது மனித குலத்துக்கு மகத்தான உதவி செய்யும் கருணைத் தொட்டிலாகவே எப்போதும் இருந்துள்ளது. இனியும் அப்படித்தான் இருக்கும்”.

பா.ஜ.க. சொல்லும் பாதக மொழிகளை, பிரித்தாளும் சூழ்ச்சிகளை தமிழ்நாடு மட்டுமல்ல; இந்தியா ஏற்காது !

### அமைச்சர்கள் கே.என்.நேரு, சிவ.வீ.மெய்யநாதன் சிறப்புரை! மயிலாடுதுறை மாவட்ட தி.மு.க. சார்பில்

# வாக்குச்சாவடி முகவர்கள் (பி.எல்.ஏ2) ஆலோசனைக் கூட்டம்!

## மாவட்டக் கழகச் செயலாளர் நிவேதா எம்.முருகன் எம்.எல்.ஏ. அறிவிப்பு!

மயிலாடுதுறை, நவ. 2 -

மயிலாடுதுறை மாவட்டக் கழகச் செயலாளர் நிவேதா எம்.முருகன் எம்.எல்.ஏ. விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-



கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி அவர்களின் ஆணைக்கினங்க மயிலாடுதுறை மாவட்ட தி.மு.க. சார்பில் மயிலாடுதுறை மாவட்டத்திலுள்ள வாக்குச்சாவடி முகவர்கள் (பி.எல்.ஏ2) பூத் டிஜிட்டல் ஏஜெண்ட் (பி.டி.ஏ.) ஆலோசனைக் கூட்டம் நாளை (3ஆம் தேதி - திங்கட்கிழமை) மாலை 3.00 மணிக்கு மயிலாடுதுறை சிக்னேச்சர் திருமண மண்டபத்தில் நடைபெற உள்ளது.

கூட்டத்தில் மண்டல பொறுப்பாளரும் நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சருமான கே.என்.நேரு, பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ. மெய்யநாதன் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரையாற்றுகிறார்கள். கூட்டத்தில் மயிலாடுதுறை, சீர்காழி, பூம்புகார் ஆகிய சட்டமன்றத் தொகுதிகளின் பார்வையாளர்கள், மாநில, மாவட்டக் கழக நிர்வாகிகள், சட்ட மன்ற இந்நாள், முன்னாள் உறுப்பினர்கள், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள், பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள், நிர்வாகிகள் மற்றும் கிளை, வார்டு கழகச் செயலாளர்கள், நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்பு முந்நாள், பிரதிநிதிகள், நகர்மன்ற பேரூராட்சி மன்றத் தலைவர், துணைத் தலைவர், உறுப்பினர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ள வேண்டுமென கேட்டுக் கொள்கிறேன்.

பொருள்,

1. என் வாக்குச்சாவடி, வெற்றி வாக்குச்சாவடி,

2 எஸ்.ஐ.ஆர். (சிறப்பு தீவிர வாக்காளர் பட்டியல் திருத்த சீராய்வு) குறித்து,

3. கழக ஆக்கப்பணிகள்.

இவ்வாறு அவர் அறிக்கையில் கூறியுள்ளார்.